[2023] 3 எஸ்சிஆர் 184

அஸ்வினி குமார் உபாத்யாய்

எதிர்

மத்திய அரசு & பிறர்

நீ.பே.மனு (உரிமையியல்) எண் 190/2023

பிப்ரவரி, 27, 2023

[மாண்புமிகு நீதியரசர் திரு. கே.எம். ஜோஸப்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திருமதி. பி.வி. நாகரத்தினா ஜே]

இந்திய அரசமைப்புச் சட்டம் – வகுமுறைக்கூறு 23, 14 – உத்தரவுக் கோரி மனுதாக்கல் – காட்டுமிராண்டித்னமாக அந்நியர் படையெடுப்புக்குப் பின்னர் பெயரிடப்பட்ட பழமைவாய்ந்த சரித்திர, கலாசார மற்றும் மத இடங்களில் அசல் பெயர்களை கண்டுபிடிக்க பெயரிடும் குழு ஒன்று உள்துறை அமைச்சகம் அமைக்க, இந்திய தொல்பொருள் ஆய்வு ஆய்ந்து ஆரம்ப காலப் பெயர்களை வெளியிடல், தங்களது வலைத்தள்ங்கள் மற்றும் பதிவுகளில் மைய அரசும் மாநில அரசும் நாளது தேதி வரை பதிவிட – முடிவு: அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பில் சமயச்சார்பின்மை பட்டைதீட்டப்பட்டுள்ளது – அரசமைப்பில் கூறப்பட்டவாறு எல்லா வகுப்பினரின் அடிப்படை உரிமைகளைப் பெற உறுதி செய்கின்ற சமயச்சார்பற்ற தேசம் பாரதமாகும் – மாநில நடவடிக்கையில் சமத்துவம் மற்றும் நியாயம் இரண்டும் உறுதி செய்யப்பட்டவாறு, வகுமுறைக்கூறு 14 ல் தனித்துவமாக நிற்கிற சட்டத்தின் ஆட்சி, சமயச் சார்பின்மை மற்றும் அரசமைப்பை பாரத அரசு பின்பற்ற வேண்டும் – வகுமுறைக்கூறு 32 ன் கீழ் எல்லோரது அடிப்படை உரிமைகளின் பாதுகாவலராக செயல்படும் இந்நீதிமன்றத்ததால் கோரப்பட்ட பரிகாரம் வழங்கப்படவில்லை.

நீதிப்பேரானை மனுவைத் தள்ளுபடி செய்த நீதிமன்றம்

முடிவு: 1.1 அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பில் சமயச் சார்பின்மை பட்டைதீட்டப்பட்டுள்ளது. நாட்டின் நிகழ்காலமும் எதிர்காலமும், கடந்த காலத்தின் கைதியாக இருக்கமுடியாது. பாரதத்தின் ஆளுமை, சட்டத்தின் ஆட்சி, சமயச் சார்பின்மை வகுமுறைக்கூறு 14–இல் சொல்லப்பட்ட அரசமைப்பு ஆகியவற்றுக்கான காப்பாளராக அரசின் நடவடிக்கை சமத்துவத்துடன் மற்றும் நியாயமாயும் இரத்தல் வேண்டும். பாரம்பரியமான புறிந்துணர்வுடன் தேர்ந்தேடக்கப்பட்ட குடியரசுத் தலைவருடன் அமைந்த அமைப்பு ஆக மட்டும் உருவாகாமல், குடியரசாக வேண்டும் என நம் முன்னோர்கள் சிந்தித்தார்கள். ஆனால் அது ஜனநாயக அடிப்படையில் இருப்பதால் எல்லாதரப்பு மக்களுக்கு உரிமைகளை உறுதி செய்யுமாறும் கூட அது ஈடுபடவேண்டும். நாடு மன்னேற்றப்பாதையில் செல்லவேண்டும் என்பது மிக முக்கியமானது. பகுதி IV–இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் நோக்கங்களை நிறைவேற்றும் அதே வேளையில், அரசமைப்பின் பகுதி III–இல் தரப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் கருத்திற்கொள்ளவேண்டும். அவை அரசின் ரதத்திற்கு இரு சக்கரங்களைபோல குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் சீரான வளர்ச்சிக்காக அவை இரண்டுமே இன்றியமையாத ஒன்றாகும், சமூகத்தின் எல்லா தரப்பினரையும் ஒன்றினைக்கும்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். (பத்திகள் 5, 9 மற்றும் 10)

1.2. எந்தவொரு தேசத்தின் வரலாறும், அதன் எதிர்கால தலைமுறையினரைக் கடந்த காலத்தின் கைதிகளாக மாற்றும் பயிலிடமாக

அமையக்கூடாது. நாட்டின் பெரும் நன்மைக்காகவும், கட்டுப்பாட்டுக்குள்ளான கருத்தையே ஏற்றுக்கொள்ளுவதை நோக்கி, பல்வேறு பிரிவினதிடையே நல்லெண்ணத்தைப் பேணுவது என்பது அனைத்து பங்குதாரர்களுக்கும் நிரந்தர நினைவூட்டலாக மகவுரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் சரியாக இடம் பிடித்துவிட்டது என்பதே முகவுரையில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ள சகோதரத்துவம் குறித்த பொன்னான கொள்கையாகும். இறுதியாக இறையாண்மை உடைய சனநாயகக் குடியரசை நிறுவுவதற்காகவும், நீதிமன்றங்களும் மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எல்லா தரப்பினருக்கும் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்ட சமயச் சார்பற்ற நாடு பாரதமாகும் என்ற உயர்ந்த உணர்தலால் வழிநடத்தப்படவேண்டும் என்பதை நாம் அடிக்கடி நினைவில்கொள்ளவேண்டும். இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 32–இன் கீழான அனைத்த அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாவலராகச் செயல்படும் இந்நீதிமன்றம், இது தொடர்பாக முகவுரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை மனதிற்கொண்டு, நீதிமன்றம் மிக உயர்வாக கருத்திற்கொள்ளவேண்டிய அதன் மதிப்புகளைக் கருதி, கோரப்பட்ட பரிகாரங்கள் வழங்கப்படக்கூடாது. (பத்திகள் 11, 12)

அருள்மிகு கேசவானந்த் பாரதி ஸ்ரீபடகல்வாறு எதிர் கேரள மாநில அரசு மற்றும் ஒரவர் (1973) 4 எஸ்சிசி 225: (1973) 0 சப்பிளி எஸ்சிஆர் 1 ; எஸ்ஆர் பொம்மை மற்றும் பிறர் எதிர் இந்திய ஒன்றியம் மற்றும் பிறர் (1994) 3 எஸ்சிசி 1; (1994) 2 எஸ்சிஆர் 644 – பின்பற்றப்பட்டது.

கர்நாடக மாநில அரசு எதிர் பிரவீன் பாய்தொகாடியா (டாக்டர்)(2004) 4 எஸ்சிசி 684 : (2004) 3 எஸ்சிஆர் 652; எம்.பி. கோபாலகிருஷ்ணன் நாயர் எதிர் கேரள மாநில அரசு (2005)11 எஸ்சிசி 45: (2005) 3 எஸ்சிஆர் 712 – சார்வுறப்பட்டுள்ளது.

தீர்ப்பு வழிச்சட்டம்

(1973) சப்பிஸி. எஸ்சிஆர்1	பத்தி 5	பின்பற்றி
(1994) 2 எஸ்சிஆர் 644	பத்தி 5	பின்பற்றி
(2004) 3 எஸ்சிஆர் 652	பத்தி 6	சார்ந்து
(2005) 3 எஸ்சிஆர் 712	பத்தி 7	சார்ந்து

உரிமையியல் முதலேற்பு அதிகாரவரம்பு : நீ.பே.மனு (உரிமையியல்) எண் 190/2023.

(அரசமைப்புச்சட்டம் வகுமுறைக்கூறு 32 ன் கீழ்)

வழக்குரைஞர்கள்:

அஸ்வினிகுமார் துபே .....மனுதாரருக்காக

அஸ்வினி குமார் உபாத்யாய் .... மனுதாரர் நேரில்

மாண்புமிகு நீதியரசர் திரு.கே.எம். ஜோஸப் அவர்களால் நீதிமன்றத்தில் தீர்ப்புரை பகரப்பட்டது.

1. மனுதாரரால் கோப்படும் பரிகாரம் பின்வருமாறு :–

" அ) அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 21, 25 மற்றும் 29 ல் உத்தரவாதம் அளிக்கப்பட்ட மதிப்புக்கான உரிமை, மதத்துக்கான உரிமை மற்றும் பண்பாட்டுக்கான உரிமை காத்திட மற்றும் இறையாண்மையைப்

பராமரிக்க, காட்டுமிராண்டித்தனமான வெளிநாட்டு படையெடுப்பாளர்களால் பெயரிடப்பட்ட புராதன வரலாற்று பண்பாட்டு மத இடங்களின் அசல் பெயர்களைக் கண்டுபிடிக்க "மறுபெயரிடும் குழு" அமைத்திட உள்துறை அமைச்சகத்துக்கு உத்திரவிடகோரி ;

ஆ) மறாக அரசமைப்புச் சட்டம் வகுமுறைக் கூறு 19 ன் கீழ் உத்திரவாதம் தரப்பட்ட "அறிந்துகொள்ளும் உரிமையைப்" பாதுகாப்பதற்காக, காட்டுமிராண்டித்தனமான வெளிநாட்டு படையெடப்பாளர்களால் மறுபெயரிடப்பட்ட புராதன, வரலாறு பண்பாடு, மதஇடங்களின் ஆரம்பகால பெயர்களை ஆய்வுசெய்த மற்றும் வெளியிட இந்திய தொல்பொருள் துறைக்கு உத்திரவிடகோரி,

இ) காட்டுமிராண்டித்தனமான வெளிநாட்டு படையெடுப்பாளர்களால் பெயரிடப்பட்ட புராதன வரலாறு பண்பாடு, மத இடங்களின் அசல் பெயர்களை வலைத்தளத்திலும் பதிவுகளிலும் நாள தேதிவரை பதிவிட மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு உத்திரவிதடக் கோரி.

2. நேரடியாக முன்னிலையான மனுதாரர் திரு. அஸ்பினி குமர் உபாத்யாய் அவர்களின் வாதங்களை நாங்கள் கேட்டோம்.

3. சுருக்கமாக, மனுதாரரின் வழக்கு பின்வறுமாறு:

நாடு 75 வது ஆண்டு சுதந்திரதினத்தைக் கொண்டாடி வருகிறது ஆனால், "கொடுமையான அயல் நாட்டு படையெடுப்பாளர்களின்" மற்றும் அவர்களது பணியாளர்கள், குடும்ப உறுப்பினர்களின் பெயரில் பல புராதன, வரலாறு,

பண்பாடு மத இடங்கள் உள்ளன. அவர் பல்வேறு உதாரணங்கள் தந்துள்ளார் அரசமைப்புச் சட்டம் வகுமுறைக் கூறு கீழ் உள்ள மதிப்புக்கான உரிமையை, அவர் குறிப்பிடுகிறார். வகுமுறைக் கூறு 19 மற்றும் 29 ல் பாதுகாக்கப்பட்ட பண்பாட்டு அடிப்படை உரிமையும் உள்ளது என அவர் மேலும் சமர்ப்பித்துக்கொள்கிறார். மீண்டும், மத உரிமை இறித்த வகுமுறைக் கூறு 25–ஐ குறிப்பிடுகிறார் மற்றும் அறிந்து கொள்ளும் அடிப்படை உரிமையைப் பொறுத்து, அவர் வகுமுறைக்கூறு 19(1) (a) – ஐ சார்ந்துள்ளார். "கொடுமையான படையெடுப்பாளர்கள்" பெயரை தொடர்ந்து பயன்படுத்துவதால் இறையாண்மை என்ற கருத்து சமரசம் செய்யப்பட்டது குறித்து கவனத்திற்கு கொண்டு வருகிறார்.

4. மனுதாரர், உண்மையில், கீழேகண்டவாறு சட்ட வினாக்களுக்கு எங்கள் கவனத்தை ஈர்த்துள்ளார்:

1. காட்டுமிராண்டித்தனமான படையெடுப்பாளர்களின் பெயரிலேயே புராதன, வரலாற்று, பண்பாடு மற்றும் மத இடங்கள் தொடர்வது இறையாண்மைக்கு எதிரானதா?

2. அரசமைப்புச் சட்டம் வகுமுறைக்கூறு 27 ன் கீழ் உத்தரவாதம் அளிக்கும் மதிப்புக்கான உரிமையைப்பெற, புராதன, வரலாறு பண்பாடு மற்றும் மத இடங்களில் அதன் அசல் பெயரையே மீட்க, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு கடமை உள்ளதா?

3. அயல்நாட்டினர் ஆட்சியில் மாற்றப்பட்ட புராதன, வரலாறு, மதஇடங்களின் பெயர்களை மீட்டெடுத்துக் கோரும் பரிகாரம் நாட்டின் ஒற்றுமை மற்றும் முழுமை தொடர்புடையதா மற்றும் அரசமைப்பின் முகவுரையில் உள்ள போற்றத்தக்க நோக்கம் நிறைவேற்றப்படவேண்டுமா?

4. மதத்தைப் போதிக்க, பின்பற்ற மற்றும் பரப்ப உள்ள உரிமை மத இடங்களின் பெயரோடு இணைக்கப்பட்டுள்ளதா மற்றும் வகுமுறைக்கூறு 25 இல் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மதத்தைப் போதிக்க, பின்பற்ற மற்றும் பரப்ப குடிமக்களுக்கு உதவும் வகையில் அயலார் ஆட்சியில் செய்யப்படும் மாறுதல்கள் மீட்டெடுக்கப்படவேண்டுமா?

5. ராமாயண மற்றும் மகாபாரத காலத்தில் இருந்த இடங்களின் பெயர்கள் தன்னிச்சையாக மட்டும் சட்டவிரோதமாக அயலார் ஆட்சியில் மாற்றப்பட்டுள்ளதா மற்றும் அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக் கூறு 29 ன் கீழ் உத்தரவாதம் தரப்பட்ட தொன்மை கலாச்சாரத்தை பின்பற்றும் உரிமையைப் பாதுகாக்க, அது மீட்டெடுக்ப்பட வேண்டுமா?

6. தொன்மையான, வரலாறு, பண்பாட்டு மத இடங்களின் பெயர்களை மீட்டெடுப்பது, வகுமுறைக்கூறு 21 ல் வழங்கப்பட்ட அடையாளம் காணும் உரிமையுடன் தொடர்புடையதா?

7. வகுமுறைக்கூறு 19 ன் கீழ் உத்தரவாதம் தரப்பட்டுள்ள அறியும் உரிமையில், தொன்மை, வரலாறு, பண்பாடு, மத இடங்களின் அசல் பெயர்களை அறிந்து கொள்வதும் அடங்கியுள்ளதா?

5. அரசமைப்புச்சட்டம் வகுமுறைக்கூறு 32 ன் கீழ் விடயங்களைக் கையாளும் நீதிமன்றமாயிருப்பதால் அடிப்படை உரிமைகளை நிலைநாட்டும் பணி நீதிமன்றத்திற்கு தரப்பட்டுள்ளது என்பதால் அதனை கவனத்திற்கொள்ள வேண்டும் என்பதை நாங்கள் அறிகிறோம். இந்தியா அதாவது பாரத் முகவுரையின் வரையறைகளின் படி சமய சார்பற்ற நாடு. அருள் மிகு கேசவானந்த பாரதி ஸ்ரீ படகல்வாரு எதிர் கேரள மாநில அரசு மற்றும் ஒருவர் ((1973) 4 எஸ்சிசி 225) என்ற வழக்கில் தனியானை மாநில மதம் என்று ஒன்று இல்லாத, இந்தியா சமயச்சார்பற்ற நாடு எனக் கருத்துக்கூறியுள்ளதை நாங்கள் அறிந்தோம் (பத்தி 487 காண்க). மதச்சார்பற்பற்ற மற்றும் கூட்டாச்சித் தத்தவத்துடன் அரசமைப்பு உள்ளது என்பது "அரசமைப்பு கட்டமைப்பின் அடிப்படைத்தத்துவம்" என காணப்படுகிற (பத்தி 582 இல் காண்க). அரசமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பில் சமயச்சார்பின்மை பட்டைதீட்டப்பட்டு உள்ளது என்பது எஸ்ஆர் பொம்மை மற்றும் பிறர் எதிர் மத்திய அரசு பிற் வழக்கில், 9 கற்றறிந்த நீதிபதிகள் அமர்வில் முடிவாக அறிவிக்கப்பட்டுள்ளது இந்த நீதிமன்றம் அதில் மற்றவற்றுக்கிடையே விளம்பியுள்ளதாவது :

" 144. அத்தகைய சூழ்நிலைகளில், அரசமைப்பு அந்தக்கட்சியால் அமைக்கப்பட்ட அமைச்சகங்கள் கட்டமைப்பின் அடிப்படையின் பகுதியாகவும் மற்றும் அரசமைப்பின் ஆத்மா ஆகவும் அமைந்த சமயச்சார்பின்மை குறிக்கோளை பின்பற்றும் என்பதில் நம்பிக்கையில்லை.

145. இந்த வாதங்கள் நமது அரசமைப்பால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சமயச்சார்பின்மை கொள்கை குறித்து விவாதிக்க எங்களை தவிர்க்கமுடியாமல், அழைக்கின்றன. எந்த மதத்தையும் தனியாகவோ அல்லது பொது வெளியிலோ பின்பற்றுவதை நமது அரசமைப்பு தடைசெய்யவில்லை. அரசமைப்பின் முகவுரைவழியாக, இந்த நாட்டின் மக்கள் உறுதிகூறி இந்த நாட்டினை உருவாக்கி, பிறவற்றுடன் சமயசார்பற்ற குடியரசு என்று மற்றும் அதன் குடிமக்கள் எல்லோருக்கும் (i) சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதி (ii) எண்ணம், சொல், நம்பிக்கை, நேர்மை மற்றும் வழிபாடு சுதந்திரம் (iii) நிலை மற்றும் வாய்ப்புகளில் சமத்துவம் (iv) எல்லோரிடமும் சகோதரத்துவத்தை வளர்த்தல் தனி நபர் கௌரவம், தேசத்தின் ஒற்றுமை மற்றும் நேர்மை உறுதி செய்யவும் உறுதி பூண்டுள்ளது. பொது அமைதி, அறம் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டு மற்றும் பிற அடிப்படை உரிமைகள் மற்றும் மதம் பின்பற்றலுடன் இணைந்த பொருளியல், நிதி அரசியல் அல்லது சமயசார்பின்மை நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் அல்லது முறைப்படுத்தும் சட்டம் இயற்றும் அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு மனச்சாட்சி சுதந்திரத்துடன் மற்றும் மதத்தைக் கூறு, பின்பற்ற மற்றும் பரப்ப உரிமைகள், எல்லா நபர்களுக்கும் அரசமைப்பின் வகுமுறைக்கூறு 25 உத்திரவாதம் அளிக்கிறது. ஒவ்வொரு மதப்பிரினரும் அல்லது எந்த பிரிவினரும் (அ)

மத மற்றும் அறம் காரணங்களுக்காக அமைப்பு தோற்றுவித்து மற்றும் பராமரிக்க (ஆ) மதம் சம்பந்தப்பட் விடயங்களில் அவர சொந்த விடயங்களை நிர்வகிக்க (இ) அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வைத்திருக்க மற்றும் பெற (ஈ) சட்டப்படி அத்தகைய சொத்துக்களை நிர்வகிக் உரிமைகளுக்கு வகுமுறைக்கூறு உத்திரவாதம் தந்துள்ளது. தனியான பண்பாடு உடைய குடிமக்களின் ஒவ்வொரு பிரிவினருக்கும் வகுமுறைக்கூறு 29 உத்தரவாதம்தருகிறது. எல்லா மதச்சார்பான சிறு பான்மையினரும் அரர்களது விப்பப்படி கல்வி நிறுவனங்களை அமைத்து நிர்வகிக்க வகுமுறைக்கூறு 30 வகை செய்கிறது. மதச்சார்புடைய சிறுபான்மையினரால் நிர்வகிக்கப்படும் கல்வி நிறுவனத்திற்கு மான்யம் வழங்குவதில் வேறுபாட்டினைஅரசு காட்டுவதைத் தடுக்கிறது. எந்த ஒரு குடிமகனின் மதத்திற்கு எதிரான வேறுபாடினையும் வகுமுறைக்கூறுகள் 14,1 5 மற்றும் 16 தடுக்கிறது மற்றும் சட்டப்படியான சம பாதுகாப்பிற்கும் பொது வேலை வாய்ப்பில் சமவாய்ப்பிற்கும் உத்தரவாதம் அளிக்கிறது. ஒரே மாதிரியான உரிமையியல் நூலை, அதன் குடிமக்களுக்கு பெற்றிடும் செயலில் அரசிற்கு வகுமுறைக்கூறு 44 வகை செய்கிறது. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் பிறவற்றுடன் கடமையினையும் வகுமுறைக்கூறு 51–அ–ஆனது அ) அரசமைப்பையும், அதன் நோக்கம் மற்றும் அமைப்பினையும் பின்பற்றுவதற்கு ஆ) இந்திய மக்கள் எல்லோரிடமும் போதுவான சகோதரத்துவத்தினையும், இணக்கத்தினையும் ஏற்படுத்த, அவர்களிடையே, மத மற்றும் பிரிவு

வேறுபாடுகளைக் களைவதற்கு இ) நம்முடைய பாரம்பரியத்தின் கூட்டு கலாச்சாரத்தினை மதிப்பதற்கு மற்றும் பாதுகாப்பதற்கு ஈ) விஞ்ஞான மனநிலை மனிதத்துவம் மற்றும் ஆய்வின் நோக்கம் மற்றும் சீரமைப்பு மேம்படுத்துவதற்கு மற்றும் உ) பொதுச் சொத்தைப் பாதுகாத்தல் மற்றும் வன்முறையை தவிர்ப்பதற்கு ஆகிய கடமைகள் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உள்ளது.

148. நம்முடைய அரசமைப்பின் கீழ் உள்ள சமயச் சார்பின்மை குறித்த மேலே செய்த விவாதத்திலிருந்து முக்கியமாக வெளிப்படுகிற விடையம் யாதெனில், அரசின் பார்வை மதங்கள் மீது என்னவாயிருந்தாலும் மதப்பிரிவுகள் வகுப்பினர் மதம் அரசின் எந்த மதச்சார்பின்மை செயல்களுடன் கலக்கப்படாது. உண்மையில் மதத்தின் ஆக்கிரமிப்பு, சமயச்சார்பின்மை நடவடிக்கைகளில் கடுமையாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. நாம் மேலே கூறிய குறிப்புகளின்படி அரசமைப்பு வகையங்களின்படி இது வெளிப்படுகிறது. மதம் அல்லது மதங்கள் மீதான அரசின் சகிப்புத் தன்மை அதை ஒரு மத அல்லது இறையாண்மை அரசாக மாற்றாது. தங்களது மதங்களை பின்பற்ற மற்றும் போதிக்க குடிமக்களை அரசு அனுமதிக்கும்போது, மாநில அரசின் மதச்சார்பற்ற நடவடிக்கைகளில் வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ மதத்தை அறிமுகப்படுத்த அனுமதிக்காது. மதச்சார்பற்ற நடவடிக்கையிலிருந்து வேறுபட்ட ஆன்மிக வாழ்க்கை தொடர அனுமதிக்கும் அளவுக்கு மட்டும் சுதந்திரமும் பொறுமையும் மதத்திற்கு உண்டு. பின்னர் உள்ளது அரசின் விடையங்களில் தனிப்பட்ட வரம்பில் வரும். ஒரு வேட்பாளர் அல்லது அவரது முகவர், அல்லது எந்த பிறநபரும் வேட்பாளரின் இசைவுடன் அல்லது அவரது தேர்தல் முகவர் மூலம்,

அவரது மதம், சாதி, இனம், சாதி பிரிவு பட்டியல் அல்லது மொழி அல்லது மத அடையாளங்களைப் பயன்படுத்தி அல்லது வேண்டுகோள்விடுப்பதை, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 123 உட்பிரிவு 3 லிருந்து வெளிப்படுகிறது. மதம், இனம், சாதி, சாதிப் பிரிவு பட்டியல் அல்லது மொழி ஆகியவற்றால் ஒருவேட்பாளர் அல்லது அவரது முகவர் அல்லது எந்த பிறநபரும் வேட்பாளரின் இசைவுடன் அல்லது தேருதல் முகவர் மூலம் அந்த வேட்பாளரின் வெற்றிவாய்ப்புக்காக அல்லது பிற வேட்பாளர்களின் தேர்வைப் பாதிக்கும் வகையில் அதன் காரணமாக குடிமக்களின் பல வகுப்பினரிடையே விரோதமும், வேறுப்பும் தரும் உணர்வை ஊக்குவித்தாலும் அல்லது ஊக்குவிக்க முனைந்தாலும் அதே பிரிவின் உட்பிரிவு 3–அ தடைச் செய்கின்றது. உட்பிரிவு 3 மற்றும் 3–அ வகையங்களை மீறுதல், மேற்படி பிரிவின் வரையறைக்குட்பட்டு மோசமான நடைமுறைகளாகக் கருதப்படுகிறது.

197. மதக் கோட்பாடுகள் மற்றும் அரசியலில் சாதி உணர்ச்சிகள் ஆகியவை எழுதல் சமயச்சார்பின்மைக்கு எதிரானது . அவை பிரிவினைவாதிகள், பிரிவினை அமைப்பை ஊக்குவித், தேசிய ஒருமைப்பாடு இல்லாததற்கான காரணங்களாக அமைந்து விடும் மற்றும் பாராளுமன்ற சனநாயக அமைப்பு மற்றும் அரசமைப்பின் தேல்வியாகிவிடும். தங்களது சுதந்திரமான மற்றும் நேர்மையான வாக்குறிமையை செலுத்திட எந்த மோசடி நடவடிக்கைகளால் பாதிக்கப்படாதவாறு தேர்தல் நடைமுறையில் குடிமகன்கள் வேகமாக கலந்துகொள்ள நீதி நடைமுறை முன்னேற்றவேண்டும். முறையான சரியான தொடர்புடையதான விளக்கமே சனநாயகத்தினை காத்திடவும் மற்றும் சனநாயக நடைமுறையை பராமரிக்கவும்

ஏற்படக்கூடிய மோதல்போக்கில் கூட அத அடித்தளமாக அமையும், அதுவே, பொறுப்பை நிர்ணயிக்கும் அரசமைப்பு அளவுகோலின் வரம்பினால் அரசியல் கட்சிகளைக் கொண்டுவந்து, கடுமையான பின்பற்றலுக்கான அரசமைப்புச் சட்டங்களைப் பின்பற்றவும், அரசமைப்புக்கு விளக்கம் தருவது நீதிமன்றத்தின் கடமையாகிறது.

304. ஒரு நபரின் உரிமைகள், அவரது கடமைகள் மற்றும் அவருக்கு உரியன ஆகியவை குறித்து விவாதிக்கையில், அரசு ஒருவனின் மதம், நம்பிக்கை அல்லது திடநம்பிக்கை ஆகியவற்றை ஒட்டுமொத்தமாக விலக்கிவைத்தாலன்றி, அரசமைப்பு உறுதி கூறிய சமூக நீதி, நம்பிக்கையின் சுதந்திரம் திடநம்பிக்கை அல்லது வழிபாடு மற்றும் சமநிலை மற்றும் சமவாய்ப்புகளை எவ்விதம் அடையமுடியும்? <u>எனவே சமயச் சார்பின்மை என்பது எதிர்ப்புக்காட்டாத மதப் பெறுமையை விட அதிகமானதாகும். அது அனைத்து மதங்களையும் சமமாக நடத்தும் ஒரு உறுதியான கொள்கையைக் கொண்டுள்ளது. இந்த செயலே சிலராள் மதத்தை நோக்கிய ஒரு சமத்துவ நிலை அல்லது சமத்துவத்தின் ஒரு பயன் என விவரிக்கப்படுகிறது.</u> இது மேற்கத்திய சுதந்திரமாக ஏற்பட்ட கொள்கையாகும் அல்லது அது சிலர் சொல்வதுபோல் எல்லாநேரத்திலும் இந்த மக்களின் மீது வைத்திருக்கும் நம்பிக்கையகவும் இருக்கலாம். இது முக்கியத்துவம் அற்றது. முக்கியமானது யாதெனில், அது கேசவானந்தா பாரதி (கேசவானந்தா பாரதி –எதிர்– கேரள மாநிலம், (1973) 4 எஸ்.சி.சி. 225 : 1973 சப்ளி எஸ்சிஆர் 1) மற்றும் இந்திரா என் காந்தி –எதிர்– ராஜ் நாராயன் (1975) சப்ளி எஸ்சிசி 1 : (1976) 2 எஸ்சிஆர் 347) ஆகியவற்றில் உறுதி

செய்யப்பட்டவாறு அது அரசமைப்பின் நோக்கம் மற்றும் அரசமைப்பின் அடிப்படை அமைப்பாகும். இந்த அரசமைப்பின் கொள்கையுடன் ஒவ்வாத எந்தவொரு நடவடிக்கையும், அரசமைப்புக்கு எதிரானது எனக் கூறலாம். (வலியுறுத்தப்பட்டது)

6. கர்நாடகா மாநில அரசு –எதிர்– பிரவின் பாய் தொகாடியா (டாக்டர்) (2004)4 எஸ்.சி.சி. 684 என்ற வழக்கில், இந்நீதிமன்றம் தீர்மானித்ததாவது:

9. உலகில், மதிப்புமிகு பாரம்பரியத்துடன் பல முரன்களுடன்கூடிய சமூகம் அடங்கியது இந்நாடு மற்றும் சமூக நலம், சமயச் சார்பின்மை மற்றும் ஒற்றுமை என்கிற உயர்ந்த கருத்துக்களுடன் அரசமைப்பு பொறுப்புவகிக்கிறது. அதுபோல், பலவித இனங்கள் இந்த உபகன்டத்தில் குவிக்கப்பட்டுள்ளது மற்றும் "வேற்றுமையில் ஒற்றுமை" என்கிற புனிதமான மற்றும் பொருத்தமான தெளிவான அங்கீகாரத்தினை அளிக்கும் அவர்களது சொந்த பண்பாடு, மொழி, மதம் மற்றும் வழக்கம் ஆகியவற்றை எடுத்துச்செல்கிறது. இந்த வேற்றுமை ஆரம்ப நாட்களில் பிரச்சினைகளை ஏற்படுத்தினாலும், மனிதாபிமான அனுகுமுறை/மற்றும் நட்புறவான வித்தியாசங்களை பயனுற மற்றம் அமைதியான அடிப்படையில் அவை பொரும்பாலும் தீர்க்கப்பட்டுவிட்டது. அவ்வாறாக, சமயச்சார்பின்மை அடிப்படை சட்டத்தின் பகுதியாகவும், நாட்டின் அரசியல் முறையின் அடிப்படை கட்டமைப்பின் பிரிக்கமுடியாத பகுதியாகவும் கருதப்படவேண்டும். எஸ்ஆர். பொம்மை எதிர் மத்திய அரசு (1994)3 எஸ்சிசி 1)– இல் குறிப்பிட்டுள்ளதுபோல், மதசுதந்திரம் இந்தியாவின் எல்லா மக்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அரசின் பார்வையில் மதம், ஒரு நபரின் நம்பிக்கை

அல்லது திடநம்பிக்கை என்பது ஒருதனிக் குடிமகன் மீது திணிக்கப்படுவதற்கு எந்த இடமும் மற்றும் வாய்ப்பும் இல்லை. துரதிஷ்டவசமாக, சமீபத்தில், முந்தைய ஆண்டு விஞ்ஞானிகளால் மிகுந்த சிரமத்துடன் மற்றும் வல்லமையான நோக்கமுடைய பாராட்டத்தக்க உறுதியுடன் சாதித்த தேசிய ஒருமைப்பாட்டினை குறைவாக மதிப்பிடும்படிகூட, அது இறுதியாக ஒற்றுமையின்மையை ஏற்படுத்தும், பாதிக்கும் என்று தெரிந்திருந்தும் தங்களது சொந்த நலனை சாதிக்க சில அவசியமற்ற மத முன்னுரிமை கருத்துகளுடன் அழுத்தமும் வலியும் அரசின் எந்திரங்களுக்கு உள்ளாகும் வகையில், ஒவ்வொருவருக்கும் இடையே மேலோங்கியுள்ள அனைத்து வகையான மதஆர்வத்துடன் சுய நலன் கருதி முயற்சித்து வருகிறார்கள். மதம் என்பது அரசின் சமயசார்பற்ற நடவடிக்கைகளுடன் கலக்கக்கூடாது என்றும் எந்தவிதமான மதவாதமும், சமக நல அரசின் அடிப்படைத் தேவை மற்றும் சமூகதத்தின் பெரும் பயனைப் பாதிக்கும் அரசியல் கொள்கைகளாக முகமூடி அணிந்துகொள்ள அனுமதிக்கப்படமுடியாது. மத மேல்பார்வை ஆன்ம மதிப்பு ஆபத்தாகலாம் மற்றும் சுற்றிலும் ஒழுங்கின்மை மற்றும் குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஏதாவது தனி நபர் அல்லது நபர்களின் குழு அவர்களின் செயலால் அல்லது புண்புருத்தி மற்றும் சினமூட்டும் பேச்சு என்பது பரஸ்பரம் வெறுப்புக்கான விதைகளை தூவுவதாகும் மற்றும் அவர்களது உத்தேசிக்கப்பட்ட நடவடிக்கைகள் நல்லுறவு இன்மையை உருவாக்கக்கூடும் மற்றும் சமநிலையை பாதிக்கும் பொது சமாதானம் மற்றும் அமைதி, தியாகம் செய்வது கடுமையான நடவடிக்கைகள் ஏற்படுத்தும் என்பதால், அவ்வாறான தடுப்பு நடவடிக்கைகள் கட்டாயம் மற்றும் முக்கியமான தேவை

என்பதே கருத்தாக அமைகிறது. சமூதாய நல்லிணக்கத்தை வெளியேற்றுவதாக அமையும் எந்த பேச்சும் செயலும், அரசமைப்பின் நோக்கத்தில் உள்ள உயர் மதிப்பினை அழித்துவிடக்கூடும். எல்லா சட்ட்ங்கள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் மற்றும் அதற்குமேலாக உள்ள அரசமைப்பு ஆகியவற்றின் இறுதி இலக்கு மக்கள் நலனே என்பதாகும். அவை ஒரு பொதுவான நோக்கத்தைக் கொண்டது, அதாவது, எநத் தனிநபர் அல்லது எந்த பெயரிலும் செயல்படும் குழுவிற்கு அல்லாது, முழுதுமாக சமூதாயத்தின் நலன் மற்றும் பெரும் பயனை மேம்படுத்துவதாக இருக்கும். சமூக நல்லணிக்கம், ஒருவருக்கொருவர் அன்பு மற்றும் எவர் மீதும் வெறுப்பின்மை ஆகியவை இல்லாமல் சமூக நலன் இருக்கும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஆன்ம பலத்தின் அடிப்படையில் உள்ள மதத்தின் மையம் வேதங்கள், உபநிஷதங்கள் மற்றும் புரானங்கள் மனித இனத்திற்கு வெளிப்படுத்துவது என்ன வென்றால்: "பிறரை நேசி, பிறருக்கு சேவை செய், பிறரைப் புண்படுத்தாமல் உதவிசெய்" மற்றும் "எல்லா மக்களும் சுகமாக இருப்பது" என்பதேயாகும். மதத்தின் பெயரில், உயர் நிலைப் பெற்ற நபர் எவறாயினும் அல்லது எதுவாயினும் அல்லது வேறு ஒருவரின் தூண்டுதலின்பேரில் இருந்தாலும், அரசமைப்பு வடிவத்தினை மாற்றி குழுப்பங்கள் ஏற்படுத்தக்கூடும். அது சமூகத்திலும், மனித குலத்திலும் ஒட்டுமொத்தமாக கடும் இழப்பை உண்டு பண்ணி, அங்கு தவிர்க்கமுடியாத மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். (வலியுறுத்தப்படுகிறது)

7. எம்.பி. கோபால கிருஷ்ணன் நாயர் –எதிர்– கேரள மாநில அரசு (2005)11 எஸ்சிசி 45) வழக்கில், இந்த நீதிமன்றம் விளம்பியது:

"20. இது தற்போது நன்கு அறுதியிடப்பட்ட ஒன்று :

i) அன்ம நிலை அரசு நிறுவுவதை அரசமைப்பு கடுக்கிறது.

ii) தமது சொந்த மதமாக அரசு ஏற்படுத்துவது தடுக்கப்படுவதோடு மட்டுமல்லாமல், அதனை அடையாளப்படுத்தியோ அல்லது எந்த குறிப்பிட்ட மதத்தை ஆதரிப்பதோ தடுக்கப்படுகிறது.

iii) இந்திய அரசமைப்பின் கீழுள்ள மதச்சார்பின்மை என்பது மதமற்ற சமூகம் அமைப்பு என்பது பொருளல்ல ஆனால் அவற்றுள் எந்த ஒன்றிற்கும் சாதகமான முன்னுரிமையும் அல்லது வேறுபாடு காட்டுவதும் அல்லாது என்றே பொருள்படும்.

8. மனுதாரரால் எழுப்பப்பட்ட சட்டக் கேள்விகளும் எழவில்லை என்றே நாங்கள் கருதுகிறோம்.

9. நாட்டின் நிகழ்காலமும் எதிர்காலமும், கடந்த காலத்தின் கைதியாக இருக்கமுடியாது. பாரதத்தின் ஆளுமை, சட்டத்தின் ஆட்சி, சமயச் சார்பின்மை வகுமுறைக்கூறு 14–இல் சொல்லப்பட்ட அரசமைப்பு ஆகியவற்றுக்கான காப்பாளராக அரசின் நடவடிக்கை சமத்துவத்துடன் மற்றும் நியாயமாயும் இரத்தல் வேண்டும்.

10. பாரம்பரியமான புறிந்துணர்வுடன் தேர்ந்தேடக்கப்பட்ட குடியரசுத் தலைவருடன் அமைந்த அமைப்பு ஆக மட்டும் உருவாகாமல், குடியரசாக வேண்டும் என நம் முன்னோர்கள் சிந்தித்தார்கள். ஆனால் அது ஜனநாயக அடிப்படையில் இருப்பதால் எல்லாதரப்பு மக்களுக்கு உரிமைகளை உறுதி செய்யுமாறும் கூட அது ஈடுபடவேண்டும். நாடு மன்னேற்றப்பாதையில் செல்லவேண்டும் என்பது மிக முக்கியமானது. பகுதி IV–இல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின் நோக்கங்களை நிறைவேற்றும் அதே வேளையில், அரசமைப்பின் பகுதி III–இல்

தரப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளையும் கருத்திற்கொள்ளவேண்டும். அவை அரசின் ரதத்திற்கு இரு சக்கரங்களைபோல குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் சீரான வளர்ச்சிக்காக அவை இரண்டுமே இன்றியமையாத ஒன்றாகும், சமூகத்தின் எல்லா தரப்பினரையும் ஒன்றினைக்கும்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

11. எந்தவொரு தேசத்தின் வரலாறும், அதன் எதிர்கால தலைமுறையினரைக் கடந்த காலத்தின் கைதிகளாக மாற்றும் பயிலிடமாக அமையக்கூடாது. நாட்டின் பெரும் நன்மைக்காகவும், கட்டுப்பாட்டுக்குள்ளான கருத்தையே ஏற்றுக்கொள்ளுவதை நோக்கி, பல்வேறு பிரிவினதிடையே நல்லெண்ணத்தைப் பேணுவது என்பது அனைத்து பங்குதாரர்களுக்கும் நிரந்தர நினைவூட்டலாக மகவுரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் சரியாக இடம் பிடித்துவிட்டது என்பதே முகவுரையில் மீண்டும் குறிப்பிடப்பட்டுள்ள சகோதரத்துவம் குறித்த பொன்னான கொள்கையாகும். இறுதியாக இறையாண்மை உடைய சனநாயகக் குடியரசை நிறுவுவதற்காகவும், நீதிமன்றங்களும் மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியும் அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எல்லா தரப்பினருக்கும் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு பொறுப்பு ஏற்றுக்கொண்ட சமயச் சார்பற்ற நாடு பாரதமாகும் என்ற உயர்ந்த உணர்தலால் வழிநடத்தப்படவேண்டும் என்பதை நாம் அடிக்கடி நினைவில்கொள்ளவேண்டும்.

12. எனவே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 32–இன் கீழான அனைத்த அடிப்படை உரிமைகளுக்கும் பாதுகாவலராகச் செயல்படும் இந்நீதிமன்றம், இது தொடர்பாக முகவுரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதை மனதிற்கொண்டு, நீதிமன்றம் மிக உயர்வாக கருத்திற்கொள்ளவேண்டிய அதன் மதிப்புகளைக் கருதி, கோரப்பட்ட பரிகாரங்கள் வழங்கப்படக்கூடாது என்று நங்கள் கருதுகிறோம்.

13. நீதிப்பேராணை மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

நீ.பே. மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

பொறுப்புத் துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."